பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை 21.09.2021 கதிர் 320

## இது ரகசியம் அல்ல!

தமிழரசு, தமிழ்க் கூட்டமைப்பு தொடர்பாக சில பல விடயங்களை இப்பத்தியில் அவ்வப்போது பரி மாறி வருகிறேன். என்னுடைய விருப்பு - வெறுப்புகளை முன் னிலைப்படுத்தி இவற்றை நான் கூறி வருகின்றேன் என்று சிலர் குறை கூறுவதுண்டு. பக்கம்02 »

## மேலும் 93 பேர் மரணம் மொத்தக் காவு 12,218

இலங்கையில் மேலும் 93 பேர் கொரோனா வைரஸ் தொற் றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபு ணர் அசேல குணவர்தன தெரி வித்துள்ளார்.

இதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண் ணிக்கை 12 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 93 பேரில் 45 ஆண்களும், 48 பெண்களும் உள்ளடங்கின் றனர். ☞11

## நேற்று தொற்று 1,509

இலங்கையில் மேலும் 1,509 பேர் கொரோனா வைரஸ் தொற் றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் ☞11

## வவுனியா நகர சபை உறுப்பினர் கொரோனாத் தொற்றால் மரணம்



(வவுனியா நிருபர்)

வவுனியா நகர சபை உறுப்பி னர் ஒருவர் கொரோனாத் தொற்று காரணமாக நேற்று மரணம டைந்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா நகரசபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார் பில் தெரிவு ☞2

# விரைவில் ஐந்தாம் அலை; தடுக்க ஆறு பரிந்துரைகள்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைப்பு



இலங்கையில் கொரோனாவின் நான்காம் அலையின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், ஐந்தாம் அலை இன்னும் சில மாதங்களில் தாக்கக்கூடும்.

- இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

ஐந்தாவது அலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய ஆறு பரிந்துரைகளையும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ளது. ☞2

## யாழில் போதைப்பொருளுடன் கைதானவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டில் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகளுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரை ஒரு வாரம் தடுத்து வைத்து விசாரணை நடத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்தது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ். திருநெல்வேலி பகுதியில் காரில் பயணித்த நால்வர் சோதனையின் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயின் 2 கிராம் ☞2



## அரியாலை குடும்பஸ்தர் படுகொலை; கள்ளத் தொடர்புடையவரைக் காப்பாற்ற குடும்பப் பெண் மாறுபட்ட வாக்குமூலம்

### இருவருக்கும் 14 நாள்கள் விளக்கமறியல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., அரியாலை - பூம்புகார் பகுதியில் குடும்பஸ்தர் படுகொலையுடன் தொடர்புடைய அவரது மனைவி மற்றும் மனைவியுடன் தொடர்புடைய நபர் ஆகிய இருவரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவரும் பூம்புகாரில் வசித்து வருபவருமான துரைராசா செல்வக்குமார் (வயது - 32) ☞11

## கிளிநொச்சியில் கொரோனாவால் வயோதிபர் சாவு

கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் செல்லத்துரை கதிர்காமசாமி (வயது 70) என்பவர் திடீரென உயிரிழந்திருந்தார்.

அவருடைய மாதிரிகள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதன்போதே அவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அச்சுறுத்தல் சம்பவத்தின் பின் கைதிகள் உளரீதியாகப் பாதிப்பு

### நேற்றும் நேரில் சென்று பார்வையிட்ட கஜேந்திரன் எம்.பி.

(எஸ்,நிதர்ஷன்)

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நேற்றும் நேரில் சென்று பார்வையிட்டார்.

சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க சிறைச்சாலைக்கு அவர் நேற்று சென்றார்.

கடந்த 12ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரக்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்தை தமிழ்த் ☞11



## யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் தொற்றால் மரணம்

யாழ்ப்பாணம், கோண்டாவில் வடக்கில் உயிரிழந்த பெண்ணுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இராசரத்தினம் நாகம்மா (வயது 80) என்பவரே உயிரிழந்தவராவார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் நான் சுட்டிக்காட்டும் விடயங்களில் உள்ள உண்மை, பொயகளைத் தேடிக் கண்டுபிடித்து, சரியான பதில் ஏற்பாடுகளை மேற்கொள்ளாதவர்கள் பின்னர் கவலைப்படுவர் என்பது என் கருத்து. ஏற்பதும், கவனத்தில் எடுப்பதும், எடுக்காமல் விடுவதும் அவரவர்களைப் பொறுத்தது.

கூட்டமைப்புத் தொடர்பில் தமிழரசின் பலவீனத்தைத் பயன்படுத்தியே தமிழரசை ஓரம் கட்டி, ஒட்ட வெட்டுவதற்குத் திட்டம் வகுத்து, கனகச்சிதமாகத் தயாராகி விட்டது ரெலோ. மாவை சேனாதிராசாவின் பலவீனமான தமிழரசுத் தலைமையையும், சம்பந்தனின் செயற்றிறனற்ற போக்கையும், தாங்கள்தான் பிரதான பங்காளிக் கட்சி என்ற தமிழரசின் மமதை நடத்தையையும் சரியாகப் பயன்படுத்திகாய் நகர்த்தும் தந்திரோபாயத்தை ரெலோ முன்னெடுக்கின்றது.

இரண்டு நாள்களுக்கு முன்னர் சூம் முறையில் நடைபெற்ற ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் உரையின் வாசகங்களுக்கு இடையே இந்தத் தந்திரோபாயத் திட்டம் மறைந்து கிடப்பது தெளிவாகத் தெரிந்ததாகக் கட்சியின் பிரமுகர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

தமிழரசு ஏனைய பங்காளிக் கட்சிகளைத் தூக்கி எறிந்து நடப்பது, ஒவ்வொரு தடவையும் தேசியப்பட்டியல் எம்.பி. நியமனங்களைத் தம்பாட்டிலேயே சுருட்டிக் கொள்வது, கூட்டமைப்பைப் பதிவு செய்ய விடாது தமிழரசின் கிளை அமைப்புப் போல அதை நடத்துவது, கட்சிப் பேச்சாளர் மற்றும் கொறடா பதவிகளைத் தராமல் ஏமாற்றுவது என்று தமிழரசுக்கு எதிராக நீண்ட குற்றப் பட்டியலை அடுக்கு வசனத்தில் இந்தக் கூட்டத்தில் தொடுத்திருக்கின்றார் செல்வத்தார்.

சம்பந்தனைப் போன்ற கேடு கெட்ட தலைவர் இல்லை என்ற சாரப்பட அவரது உரை அமைந்தது.

தமிழரசின் நகர்வுக்கு இரண்டு வழிகளில் பூட்டுப் போட அல்லது 'செக்' வைக்க ரெலோ தயாராகி விட்டமை உறுதியாகியுள்ளது.

உடனடியாகத் தேர்தல் ஏதும் இல்லை. தேர்தல் வரும் போது தமிழரசைக் கையாள்வது ஒரு விடயம். அதைப் பின்னர் விவரிக்கிறேன்.

உடனடியாக, கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசு எடுக்கக் கூடிய நகர்வுக்கு 'செக்' வைப்பதற்குத் திட்டம் தயார் என்றும் தெரிகின்றது.

பல்வேறு நெருக்கடிகளும் நீடித்தாலும் அரசுடன் – கோட்டாபயவுடன் – எந்தச் சமயத்திலும் பேச்சுக்குத் தயார் என்ற நிலைப்பாட்டில்தான் சம்பந்தன் – சுமந்திரன் அணி களத்தில் உள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிசாசுடனும் கூடப் பேசுவோம் என்ற நிலைப்பாட்டைத்தான் அவர்கள் பிரதிபலித்துத்து வருகின்றனர். இது தொடர்பில் கோட்டாவின் அழைப்பை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அதை வைத்தே தமிழரசை ஓரம் கட்ட ரெலோ வலை விரித்து விட்டது.

பேச்சுக்கு கோட்டா அழைத்தால் இன்ன, இன்ன நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் பேச வருவோம் என்ற நீண்ட பட்டோலையை சித்தார்த்தன், விக்னேஸ்வரன், ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருடன் இணைந்து முன்வைக்க ரெலோ இப்போதே தயார்.

சம்பந்தனின் பேச்சு முயற்சிக்கு முதலடியிலேயே கால் தடம் போடக் கனகச்சிதமான சுருக்குத் தயார்.

தமிழரசு விரும்புகின்றதோ இல்லையோ விக்கி, சுரேஷ், ஸ்ரீகாந்தா, சித்தார்த்தன் அணியுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவுப் பணி தொடரும் என்ற ரெலோவின் வெளிப்படையான நிலைப்பாட்டின் பின்னால் புதைந்து கிடக்கும் சூக்குமம் இதுதான்.

கோட்டாபய அரசுடன் பேச்சுக்குப் போகத் தயாராக இருக்கும் சம்பந்தன் – சுமந்திரன் அணியை அவ்விடயத்தில் தனித்து விட்டு, அந்த விடயத்துக்கு எதிராகத் தாங்கள் ஐந்து கட்சிகளும், (ரெலோ, புளொட், விக்கி, சுரேஷ், ஸ்ரீகாந்தா அணிகள்) ஒரே நிலைப்பாடாக அதை எதிர்த்து அறிக்கை வெளியிட்டால், அதே பாணியில் சம்பந்தன் – சுமந்திரனின் பேச்சு முயற்சிக்கு எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அறிக்கை வெளியிடும் சூழ்நிலை இருப்பதாக ரெலோ கருதுகின்றது.

சிங்களம் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது, நிபந்தனையின்றி மீண்டும் சிங்களத்திடம் – அதுவும் கோட்டாவுடன் – பேசப் போகும் முடிவை சம்பந்தன் – சுமந்திரன் அணி தனித்து எடுக்கின்றது என்று காட்டி அந்த அணியையும், தமிழரசையும் துரோகிகளாக அடையாளப்படுத்த ரெலோ வியூகம் வகுத்துள்ளது.

இந்த விடயங்கள் புரியாமல் தாங்கள் தான் தலைவர் பிரபாகரனின் ஏக வாரிசுகள் என்று வேடம் போடும் தமிழரசின் வேறு சில தலைகளும் சேர்ந்து, இந்தச் சமயத்தில் சம்பந்தன் – சுமந்திரன் அணிக்கு எதிராகக் குழி பறிக்கும் வேலையை ஆரம்பித்திருப்பது ரெலோ முன்னெடுக்கும் நகர்வுக்கு மேலும் உத்வேகத்தைக் கொடுத்திருக்கின்றது. தமிழரசின் தலைமையைக் கைப்பற்றும் நப்பாசையோடு அவசரப்பட்டு அவர்கள் முன்னெடுக்கும் கைங்கரியம் ஒட்டுமொத்தமாகத் தமிழரசுக்கே ஆபத்தாய்ப்போய் முடியப்போவதை அவர்கள் அறியாமல் இருப்பது வேடிக்கை.

தேர்தல் ஒன்று வருமானால் கூட்டமைப்புக்குள் விக்கி, ஸ்ரீகாந்தா, சுரேஷ் அணியையும் உள்வாங்கித்தான் செயற்பட வேண்டும் என்பதையும் ரெலோ ஒற்றைக் காலில் வலியுறுத்தப் போவதாகத் தெரிகின்றது. அதற்கு தமிழரசு இணங்காவிட்டால், தமிழரசு கூட்டமைப்பில் இருந்து போகட்டும், நாங்கள்தான் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்கள், இணங்கி வரும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளையும் (புளொட், சுரேஷ், விக்கி, ஸ்ரீகாந்தா அணிகளையும்) இணைத்துக் கொண்டு நாங்கள் கூட்டமைப்பாக முன்நகர்வோம் என்பதுதான் ரெலோவின் நிலைப்பாடு.

தமிழ்க் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது அதில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணிதான் இருந்தன. தமிழரசு வந்தது பின்னால்தான். ஆகவே தாங்கள்தான் கூட்டமைப்பின் மூத்த கட்சி, அந்தப் பெயருக்கு உரியவர்கள் நாங்களே, நாங்களும் சுரேஷின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் ஒன்றுபட்டு நின்றால் முதல் உரிமை எங்களுக்கே என்ற ரெலோவின் நிலைப்பாட்டிலும் ஒரு நியாயம் இருப்பது மறுக்கக் கூடியதல்ல.

இன்றைய நிலையில் ஒரு தேர்தல் வந்தால் தமிழரசு தனியாகவும் (சில சமயங்களில் ஜனநாயகப் போராளிகள் கட்சி தமிழரசுடன் நிற்கக் கூடும்),தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாகவும், ஏனைய தமிழ்க் கட்சிகள் (ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி) ஓரணியிலும் மூன்றாகக் கன்னை பிரிய வாய்ப்புண்டு.

தமிழரசைத் தனித்து விடும் துணிவில் ரெலோ இருக்கின்றது. துலாக்கோல் எந்தப் பக்கம் சரியும் என்று பார்த்து தாமும் பக்கம் சேரும் மதில் மேல் பூனை நிலைப்பாட்டில் புளொட். இந்த இரண்டுடனும் சேர்ந்து தமிழரசுக்குப் பாடம் புகட்டும் ஒரே இலக்கில் விக்கி, சுரேஷ், ஸ்ரீகாந்தா அணிகள்.

இது ஒன்றும் புரியாமல் மாகாண முதலமைச்சர் நப்பாசையில் கட்சியையே கோட்டை விடும் நீரோ மன்னராகக் கட்சித் தலைவர் மாவை.

இவ்வளவும் புரிந்தும், இந்தக் குளறுபடிக்குள் கட்சித் தலைமையைக் கைப்பற்றும் நப்பாசையில் காய் நகர்த்தி தமிழரசுக் கட்சியையே நட்டாற்றில் விடும் வேலையை ஒப்பேற்றும் சிற்றரசர்கள்.

எல்லாம் தமிழரசின் தலைவிதி...!

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு நாளை.

பதினேழு உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஏழு ஆசனங்கள்தான் உண்டு. அதுவும் கன்னை பிரிந்து நிற்கிறது.

இது குறித்து ஆராய்வதற்காக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும் செயலாளர் கோவிந்தம் கருணாகரன் எம்.பியும் நேற்று யாழ் வந்தனர். இங்கிருக்கும் ரெலோ பிரமுகர்கள் சபா குகதாஸ், நிரோஷன் தியாகராஜா ஆகியோரோடு வல்வெட்டித்துறையில் கூட்டமைப்பினரை சந்தித்துள்ளனர். தமிழரசுத் தலைவர்களுக்கு எந்தத் தகவலும் இல்லை.

றொலோவின் சம்மதத்தோடு கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சியினால் வெளியேற்றப்பட்ட சதீஸ் என்பவரை நக ர சபைத் தலைவராக தெரிவு செய்ய வேண்டும் என்று செல்வம் தலைமையிலான குழு கட்டளை பிறப்பித்துச் சென்றுள்ளது. சுரேஷ் மற்றும் சிவாஜிலிங்கம் அணிகளின் ஆதரவைத் தாங்கள் பெற்றுத் தருவார்கள் என்றும் கூறியுள்ளனராம்.

யாழ்ப்பாணத்தை விட்டுப்போகும் போது மாவையரைச் சந்தித்து, இப்படி முடிவு செய்துள்ளோம் என்று ரெலோ குழு அவருக்குத் தகவல் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் கனவுக்காக ரெலோவின் பாதத்தைக் பற்றி நிற்கும் மாவையரும் 'யெஸ் ஸேர்' என்று கூறாத குறையாகத் தலையசைத்தார் என்று கேள்வி.

மீண்டும் ஒரு தடவை பாவம் தமிழரசு என்று குறிப்பிட்டு, அதன் தலைவிதியைப் பச்சாதபத்துடன் பார்ப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

திரும்பவும் சொல்கிறேன். தீர்க்கதரிசனமற்ற மாவையைத் தலைவராகவும், நிலைமையைப் புரிந்து கொள்ளாத செயற்றிறனற்ற சம்பந்தனை கட்சியின் பெருந்தலைவராகவும், கூட்டமைப்பின் தலைவராகவும் வைத்திருக்கும் வரை தமிழரசுக்கு மீட்சி இல்லவே இல்லை. இது உறுதி.

– மின்னல் –

## விரைவில் ஐந்தாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாவின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைகளின் தீவிரம் குறைந்த பிறகு அலட்சியமாக இருந்ததே நான்காம் அலையில் ஏற்பட்ட பேரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தவகையில், அடுத்து வரும் ஐந்தாம் அலையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான முக்கிய சில பரிந்துரைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ளது.

அவையாவன:–

01) தேசிய ஆலோசனைக் குழுவின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஒப்புதலின்படி நாட்டின் சனத் தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு முழுமையான தடுப்பூசி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடுதல்.

02) தொற்று நோய்களுக்கான தேசிய ஆலோசனை குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கு நவம்பர் தொடக்கத்தில் இருந்து மூன்றாவது பூஸ்டர் டோஸை செலுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

03) சுகாதார வழிகாட்டுதல்களின்படி புதிய வாழ்க்கை முறைக்கு மக்களை உள்வாங்கல்.

04) தடுப்பூசி போடப்பட்ட போதிலும் வைரஸால் பாதிக்கப்பட்டு நேர்மறை அறிகுறியற்ற நபர்களை அடையாளம் காண இலவசமாக வழங்கக்கூடிய, எளிமையான ஒரு கொரோனா பரிசோதனை முறையொன்றை அறிமுகம் செய்தல்.

05) சமூகத்தில் பரவி வரும் கொரோனாக் கொத்தணிகளை அடையாளம் காண, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக எழுமாறாக மாதிரிப் பரிசோதனைகளை முன்னெடுத்தல்.

06) விஞ்ஞான மற்றும் சீரான முறையில் மரபணு சோதனையை நடத்துவதன் மூலம் சாத்தியமான புதிய திரிபுகளை அடையாளம் கண்டு, ஆரம்பத்தில் இருந்தே சமூகத்தில் பரவுவதை தடுக்க உத்திகளை செயல்படுத்தல்.

## யாழில் போதைப்பொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

94 மில்லிக்கிராமும் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளில் அவர்களில் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் வசிக்கும் 28 வயதுடைய முத்து என்று அழைக்கப்படும் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். மற்றைய மூவரும் 19 வயதுடையவர்கள்.

பிரதான சந்தேகநபரான முத்து என்பவர் நாட்டில் உள்ள பிரபல போதைபொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்பு வைத்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

பிரதான சந்தேகநபருக்கு நாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புள்ளதா? என்ற அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் அவரைப் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க ஒக்டோபர் முதலாம் திகதிவரை அனுமதியளிக்குமாறு பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான், பிரதான சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை ஒரு வாரத்துக்கு தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதியளித்து உத்தரவிட்டார்.

## வவுனியா நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டிருந்த தேக்கவத்தையில் வசித்து வரும் திருமதி.த.புஞ்சிகுமாரி என்பவரே மரணமடைந்தவராவார்.

இவருக்கு கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று மாலை மரணமடைந்துள்ளார்.

இவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஆளும் கட்சி உறுப்பினராகச் செயற்பட்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (100)



# நாட்டின் சுகாதாரத்துறையை சுதந்திரமாக செயற்படவிடாது அழுத்தம் கொடுக்கும் அரசு

## பல வைத்திய நிபுணர்கள் பதவியை துறப்பதற்கு இதுவே காரணம் என சிறிதரன் எம்.பி. காட்டம்

நாட்டில் சுகாதாரத் துறையை சுயாதீனமாக செயற்பட விடாது இந்த அரசு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. இதனாலேயே பல வைத்திய நிபுணர்கள் கொவிட் செயலணியில் இருந்து பதவிகளைத் துறக்கின்றனர். - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

கிளிநொச்சி தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாற்பது நாள்களாக நாடு முடக்கப்பட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றமை ஒருபுறம் இருக்க, மரணங்கள் குறைக்கப்பட்டிருக்கின் றன எனவும் கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் ஒரு புறம் சொன்னாலும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் இந்த கொரோனா செயலணியிலிருந்து விலகிச்செல்கின்றனர். எதற்காக விலகிச்செல்கின்றனர். சுகாதார நடைமுறையில் உள்ள பிரச்சினை மற்றும் வைத்தியர்களை சுதந்திரமாக செயற்பட இடமளிக்காமையே காரணம்.

சுகாதாரத்துறையை இராணுவமயப்படுத்தி இராணுவ செயலணிக்குள் சுகாதாரத்துறையை கொண்டு வந்தன் காரணமாகவே சுகாதாரத் துறையினர் கடமையிலிருந்து விலகிச்செல்கின்றனர்.

உலகத்தில் எந்த நாட்டிலும் ஓர் உயர்நிலையிலுள்ள அரசியல்வாதி பதவி விலகி அரச தொழிலுக்கு குறிப்பாக நிதிக்கு சென்றதாகவே வரலாறு இல்லை. ஆனால் இங்கு தலைகீழாக நடக்கிறது. ஒருவர் அமைச்சர் பதவியை துறந்து மத்திய வங்கி ஆளுநராகின்றார். மற்றையவர் பதவியைத் துறந்து தூதுவர் ஆகின்றார். இப்படியான செயற்பாடுகளே நாட்டில் இடம்பெறுகின்றன என்றால் இந்த நாட்டின் கஷ்ட நிலை, இராஜதந்திர நிலை,அரசியல் நிலை கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களை நம்பி வாக்களித்த சிங்கள மக்களே அன்றாட உணவுக்கு கையேந்தும் நிலையில் உள்ளனர். செயற்கைப் பசளை இறக்குமதி செய்து மானியமாக வழங்கி வந்த நிலையில் அதை கூட உடனடியாக நிறுத்தி சீனாவிலிருந்து கிருமிகளோடு செயற்கை பசளையைப் போன்று சேதனப்பசளை என்று சொல்லி கிருமிகளோடு இறக்குமதி செய்கின்றனர். - எனத் தெரிவித்தார்.

## நீராடச் சென்று காணாமல் போயிருந்த இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

நுவரெலியா - நோட்டன், வட்டவளை லொனக் பாற்பண்ணை அணைக்கட்டில் நீராடச் சென்று, நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த இரு இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை தோட்டத்தைச் சேர்ந்த சின்னையா ராஜா (வயது - 38), புத்தளம் - ஹலாவத்தை பகுதியைச் சேர்ந்த (வயது - 21) சச்சிந்த தில்ஷான் ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

வட்டவளை லொனக் பாற்பண்ணைக்குச் சொந்தமான அணைக்கட்டுக்கு,கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில், ஐந்து இளைஞர்கள் நீராடச் சென்றுள்ளனர்.

இவ்வாறு அணைக்கட்டில் நீராடச் சென்றவர்களில் இருவர், நீரில் இழுத்து செல்லப்பட்டுள்ளனர் என பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது, சின்னையா ராஜா என்ற இளைஞன் நீரில் மூழ்கியபோது, சஜிந்த டில்ஷான் என்பவர் அவரைக் காப்பாற்றுவதற்கு முற்பட்ட வேலையில், இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, அவர்களை தேடும் பணிகள் ஞாயிறு மாலை, இராணுவத்தினரும் பொது மக்களும் இணைந்து முன்னெடுத்திருந்த நிலையில், நேற்று காலை அவர்களிருவரதும் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சடலங்கள் மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைகளுக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வு; யாழில் 35 பேருக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்திய 35 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

யாழ். திருநெல்வேலி மற்றும் ஆனைக்கோட்டை பகுதிகளில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள பிரபல விடுதியில், பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 20 பேரும் ஒட்டுமடம் பகுதியிலுள்ள வீடொன்றில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 15 பேரும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக சுகாதாரப் பிரிவினரும் யாழ்ப்பாண பொலிஸாரும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 100ஆவது பிறந்ததின நினைவு



## அமரர் கண்மணி அம்மா அருணாசலம்

**தோற்றம் : 21.09.1921** **மறைவு: 17.06.2002**

**அம்மா,**

நீங்கள் இறையடி எய்திய போது இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள கொடுத்து வைக்கவில்லை எனினும் உங்கள் நூறாவது பிறந்த தினத்தில் நாம் உலகின் பல முனைகளில் இருந்த வண்ணம் எமது உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் அரிய வாய்ப்பையிட்டு உணர்வுடன் கலந்த பூரிப்பை எய்தும் அதே வேளை, ஒரு தாய் எந்த அளவு அன்பையும் பாசத்தையும் கொடுக்க முடியுமோ அதைவிட பன்மடங்கு அன்பையும் பாசத்தையும் வாரி வாரி சொரிந்தாயே அவை யாவற்றிற்கும் எனது உளங்கனிந்த நன்றி பலகோடிகள்.

**(மகன் அருணாசலம் இராஜரட்ணம்,அவுஸ்திரேலியா)**

**அம்மா!** நீங்கள் இம்மண்ணில் பிறந்து நூறு ஆண்டுகள் ஓடி விட்டன, அம்மா! உங்கள் கதைகள் பேச்சுகள் இன்றும் எம் மனதில் வந்து போகின்றதே அம்மா.நாங்கள் யாவரும் ஆண் பிள்ளைகள் என்பதால் உங்கள் சமையல் வேலைகளுக்கு நான் உதவுவதால் என்னை உங்கள் மகள் என்றே சொல்வீர்களே அம்மா!.. ஒருமுறை நீங்கள் கதவை மூடும்போது பூனைக்குட்டி ஒன்று தவறுதலாக அகப்பட்டு காயம்பட்டு இறந்துவிட அதனால் மிகவும் மனம் நொந்து குடும்பத்துக்காக அன்று முதல் நல்லைக் கந்தனை நினைத்து ஆறு நாட்கள் நோன்பிருந்து கந்த சஷ்டி விரதம் பிடித்தீர்களே.ஒருமுறை உபவாச நாளில் நீங்கள் மயங்கி விழுந்தும் கூட நான் அறிந்தவரையில் அவ்விரதத்தை முடித்ததாக ஞாபகம் இல்லையம்மா! ஆண்டுகள் பல உருண்டோடி விட்டாலும் உங்கள் அன்பான கதைகள் எம் மனதில் நிழலாடுகின்றன . என்றும் உங்கள் ஆசியுடன் எம் வாழ்வைத் தொடர்கின்றோம்.

**உங்கள் நீங்கா நினைவுகளுடன் பிள்ளைகள் சார்பில் மகன் அருணாசலம் தர்மலிங்கம் லண்டன்**

அம்மா நீங்கள் அவதரித்து இன்றோடு
அகவைகள் நூறு ஆகிவிட்டதம்மா
பண்புடன் கதை சொல்லி சீராட்டி எங்களை
கண்ணின் மணியாக வளர்த்தீர்கள் அம்மா!
நீங்கள் சொல்லி வளர்த்த கதைகள் பல
எங்கள் மனதினில் இன்னும் வந்துபோகுதம்மா
நேற்றுப் போல் இருக்கிறது நீங்கள் எமைப் பிரிந்து
இன்று எம்முடன் நீங்களில்லை என்றாலும்
நாம் வாழும் காலங்கள் உள்ளவரை
நல்வழி காட்டும் உங்கள் ஆசிகள்...
உருவத்தால் நீங்கள் இன்றில்லை என்றாலும்
உங்கள் அறிவுரைகள் என்றும் எமைவழிகாட்டும்.

**மற்றும் பிள்ளைகள்**

எங்களோடு நீங்கள் வாழ்ந்த காலம் மகிழ்வானதாகவும் இனிமையான ஒன்றாகவும் இருந்தது.எல்லோரையும் சமமாக கருதி,பண்புடன் பழகி, அன்புடன் வழிநடத்தும் பண்பு உங்களிடம் இருந்தது.நீங்கள் நல்ல குணமுள்ள அம்மாவாக,பண்பான மாமியாக,அரவணைக்கும் அப்பம்மாவாக எல்லோரையும் கவர்ந்த ஒரு ஜீவனோடு நாம் வாழ்ந்தோம் என்பதை நினைக்க எமக்கு மகிழ்வாகவும் பெருமையாகவும் நிறைவாகவும் உள்ளது. உங்களின் இழப்பு எமக்கு என்றைக்கும் இழப்பு தான் மாமி – அப்பம்மா.

**உங்கள் பிரிவால் வாடும்
மருமக்கள்,பேரர்,பூட்டப்பிள்ளைகள்**

**குடும்பத்தினர்**

**இல.689 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் 'அளப்பு' இது

**'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்' – என்பார்கள். அமெரிக்கா சென்ற இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு ஐ.நா.செயலாளர் நாகயத்தைச் சந்தித்தபோது தெரிவித்திருக்கும் கருத்துகள் இந்தப் பழமொழியைத்தான் நமக்கு நினைவூட்டின.**

***"இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும், அதற்காகப் புலம் பெயர் தமிழர்களுடனான பேச்சுக்குத் தாம் அழைப்பு விடுக்கின்றார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்"* – என்று ஐ.நா. செயலாளர் நாயகத்துடனான அவரின் சந்திப்புத் தொடர்பில் அவரது செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிக்கின்றது.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐந்து ஆண்டு காலப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர். எனினும், அவரது ஐந்து வருட ஆட்சி நிறைவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே அடுத்த தேர்தலைச் சந்திக்க வேண்டியவர். ஆகவே அவரின் தற்போதைய பதவிக் காலம் கூட முழுமையாக ஐந்து வருடமாக இருக்கப்போவதில்லை. கடைசியக இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட நான்கு வருடங்கள் பத்து மாதங்கள் முழுமையாகப் பதவியில் இருக்கவில்லை. அத்தகைய ஜனாதிபதிப் பதவியில் இரண்டாவது வருடத்தைப் பூர்த்தி செய்யும் நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். அதாவது தமது முதல் ஜனாதிபதி பதவிக் காலத்தில் நாற்பது வீதத்தை அவர் கடந்து விட்டார்.**

**ஆனால் கடந்த முக்கால் நூற்றாண்டாக இலங்கையை உலுப்பி வரும் தேசிய இனப்பிரச்சினையை உள்நாட்டில், உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்ப்பதற்கான எந்த முன் முயற்சிகளையும் அவர் இதுவரை எடுக்கவேயில்லை. இங்குள்ள சிறுபான்மையினங்களை அடக்கி, ஒடுக்கி, இல்லாமலாக்கி, இருப்பையே அழித்து, அதன் மூலம் நாட்டுக்குள் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை என்று காட்டும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்கு மேலாதிக்கத் திமிர் மட்டுமே அவரது இரத்தத்தில் ஊறிக் கிடக்கின்றது என்பது உள்நாட்டில் இனப் பிரச்சினையைப் பெரும் சிக்கலாக எதிர்கொண்டு நிற்கும் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.**

**தேசிய இனப்பிரச்சினையை எதிர்கொண்டு, அவலப்பட்டு நிற்கும் இலங்கைத் தீவின் சிறுபான்மை மக்களான தமிழர்களோடும் முஸ்லிம்களோடும் உள்ளக ஊடாட்டத்தின் மூலம் தீர்வைக் கண்டறியும் மனப் பக்குவமும், சிந்தனைப் போக்கும், நேர்மைக் திறனும் மேற்படி பேரினவாத வெறிப் போக்கில் திமிர் கொண்டலையும் அவரது பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடத்துக்கு அறவே கிடையாது என்பது நிதர்சனமான உண்மை.**

**தன்னுடைய பதவிக் காலத்தின் நாற்பது வீதத்தைக் கடந்த பின்னரும் உள்நாட்டின் சிறுபான்மையினத் தலைவர்களுடன் தேசியப் இனப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டில் தீர்வு காணும் உள்ளக ஊடாட்டத்தையே அவர் இன்னும் ஆரம்பிக்கக் கூட இல்லை. இத்தகைய அரசுத் தலைவர் புலம்பெயர் தமிழர்களுடன் பேசப் போகின்றார் என்று அறிவித்திருப்பது ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்ட கயிறு என்பதைத் தவிர வேறில்லை.**

**உள்நாட்டில் தமிழ்த் தலைவர்களுடன் இவ்வளவு காலமும் பேசக் கூட அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சீத்துவத்தில் புலம்பெயர் தமிழர்களுடனும் அவர் பேசுவது என்பது வானம் ஏறி வைகுண்டம் போவது பற்றிய அளப்புக் கதைதான்.**

## சட்ட விரோத மதுபானத்துடன் வெயங்கொடவில் பெண் கைது

*வெயங்கொட பொலிஸ் பிரிவில் பத்தலகெதர பிரதேசத்தில் வெயங்கொட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 67.5 லீற்றர் சட்ட விரோத மதுபானம் மற்றும் 1,076 லீற்றர் கோடா என்பவற்றுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் 40 வயதுடைய பத்தலகெதர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.*

*வெயங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.*

## அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படும் கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை குறைவு

### வைத்திய நிபுணர் உபுல் திஸாநாயக்க தகவல்

தடுப்பூசி வழங்கல் மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு என்பவற்றின் காரணமாக நாட்டில் தற்போது ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்களின் எண்ணிக்கையும், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட வேண்டிய தொற்றாளர் எண்ணிக்கையும் பெருமளவில் குறைவடைந்துள்ளதாக வெளிக்கள நோயாளர் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் உபுல் திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொவிட் தொற்றாளர் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கான காரணி தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைதலில் தடுப்பூசி வழங்கல் முக்கிய பங்கினை வகிக்கிறது. தடுப்பூசி வழங்கும் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் அதிகளவானோர் கொவிட் தொற்றுக்கு உள்ளான போதிலும், தீவிர நிலைமையை அடைதல் குறைவடைந்துள்ளது.

அத்தோடு தற்போது ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளமையால் ஒட்சிசனுடனான சிகிச்சை படுக்கைகள் போதியளவில் இருப்பில் உள்ளன. கடந்த காலங்களில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட முடியாதளவிற்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவு பற்றாக்குறை காணப்பட்டது.

ஆனால் தற்போது அதிதீவிர சிகிச்சை பிரிவுகளில் போதியளவு இடம் காணப்படுகிறது. தடுப்பூசி வழங்கல் மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகளால் நாம் பெற்றுக் கொண்ட பிரதிபலன் இதுவேயாகும். இதே நிலைமையைத் தொடர்ந்தும் பேண வேண்டும். - என்றார்.

## 214 ஆவது 'அமாதம் சிசலச' நிகழ்வு தர்ம உபதேசம் அலரி மாளிகையில்!

கொழும்பு, செப். 21

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைய சகல பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்படும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடரின் 214 ஆவது தர்ம உபதேச நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) அலரி மாளிகையில் நடைபெற்றது.

புத்தபெருமானுக்கு மலர் பூஜை நிகழ்த்தியதைத் தொடர்ந்து தர்ம உபதேசம் நிகழ்த்துவதற்காக வருகைதந்த ராமஞ்ஞா மஹா நிகாயவின் அனுநாயக்கர் மெதகமுவே விஜய மைத்திரி தேரரை பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ வரவேற்றார்.

பௌத்த மதத்தினூடாக கிடைக்கும் மன அமைதியை உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கப்பெறச் செய்யும் உன்னத நோக்கத்தில் சகல பௌர்ணமி தினங்களிலும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேச நிகழ்வு நடத்தப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கமைய ஆரம்பிக்கப்பட்ட 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடர் தொடர்ச்சியாக சகல பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றமையை பாராட்டிய ராமஞ்ஞா மஹா நிகாயவின் அனுநாயக்கர் மெதகமுவே விஜய மைத்திரி தேரர், ஓர் அரச தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்காக உன்னத சேவையாற்றி வருகிறார் எனச் சுட்டிக் காட்டினார்.

மன்னர் காலத்தின் பின்னர் ஓர் அரச தலைவராக மக்களுடன் மிக நெருக்கமாக இந்தளவிற்கு மக்களுக்கு சேவையாற்றக் கூடிய தலைவரொருவரைக் கண்டறிவது என்பது மிகவும் கடினமாகும் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றி நடத்தப்பட்ட 'அமாதம் சிசிலச' தர்ம உபதேச நிகழ்வில் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கு கடத்திய 1,500 கிலோ கடல் அட்டைகள் படகுடன் பறிமுதல்!

'மனோலி' தீவு வழியாக இலங்கைக்கு கடத்திய ஆயிரத்து 500 கிலோ கடல் அட்டைகள் மற்றும் நாட்டுப் படகை இந்திய கடலோரக் காவல் படை, வனத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய கடலோரக் காவல் படை, மன்னார் வளைகுடா கடல் பகுதியில், ஹோவர் கிராப்ட் மூலம் கூட்டு ரோந்து சென்றனர்.

இதன்போது, மனோலி தீவுப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நின்ற நாட்டுப்படகை கைப்பற்ற கடலில் முயன்றனர்.

அதாவது, ஹோவர் கிராப்ட் விரைந்து வருவதை அறிந்த நாட்டுப்படகில் இருந்த 4 பேர், தப்பி ஓடியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பதிவெண் இல்லா நாட்டுப்படகில் இருந்த கடல் அட்டை மூடைகளை மண்டபம் இந்திய கடலோரக் காவல் படை முகாமுக்கு கொண்டு வந்தனர்.

அப்போது, மூடைகளை பார்த்தபோது அதில் பதப்படுத்தப்படாத பச்சை கடல் அட்டைகள் ஆயிரத்து 500 கிலோ இருந்துள்ளன. அதனை மண்டபம் வனத்துறையினரிடம் படையினர் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரம் விழுந்து சிறுவன் சாவு

மாத்தளை பொலிஸ் பிரிவில் உன்னஸ்கிரிய பிரதேசத்தில் மரமொன்றை வெட்டுவதற்கு உதவி செய்து கொண்டிருந்த 16 வயது சிறுவன் மீது மரம் விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உன்னஸ்கிரிய, எல்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தளை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 82

ந.வித்தியாதரன்

கடந்த நூற்றாண்டில் உலகில் அச்சுத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக உருவான மூன்று தலைமுறை அச்சு முறைமைகளையும் கற்றுத் தேர்ந்து, பட்டறிந்து, பரிச்சயமான ஒரு பத்திரிகை ஆசிரியராக விளங்கியவர் எஸ்.டி.சிவநாயகம் என்றேன்.

உலகில் புதுப்புது அச்சக மற்றும் அச்சியந்திர முறைகள் உருவாகின்ற போது அவை பற்றிய விவரங்களை ஏனைய தரப்பினருக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கில் ஓர் அச்சியந்திரக் கண்காட்சி வழமையாக வருடம்தோறும் ஜேர்மனியின் டுஸில்டோர்வ் நகரில் நடைபெறும். இந்தக் கண்காட்சி நடைபெறும் விசாலமான மண்டபத் தொகுதிகள் அமைந்துள்ள இடத்தில் இருந்து சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் என் பாடசாலை நண்பன் குகதாசன்(குகி) நல்ல வசதி வாய்ப்புகளுடன் தமது குடும்பத்துடன் வாழ்கின்றார்.

2009 இற்கு முன்னர் விடுதலைப் புலிகள் செல்வாக்குச் செலுத்திய காலத்தில், உலகின் பல பகுதிகளிலும் இலங்கை அரசுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றிய போதெல்லாம் அந்த அனைத்து பேச்சுக்கள் நடைபெறும் இடங்களிலும், ஒன்றில் கூடத் தவறாது நான் நேரில் சென்று, பிரசன்னமாகி, பக்கத்திலிருந்து, தமிழ் வாசகர்களுக்கு உடனுக்குடன் செய்திகளை பெற்று வழங்கி வந்திருக்கிறேன்.

தாய்லாந்து, ஜப்பான், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே என்று பல நாடுகளிலும் பல தடவைகள் நடைபெற்ற பேச்சுகளின் போதெல்லாம் டுஸில்டோர்வ் நகரில் இருந்து என்னுடன் கூட வந்து இந்த இடங்களில் எல்லாம் என் பத்திரிகையின் படப்பிடிப்பாளராகவும் என் நண்பராகவும் அவர் தவறாது பங்குபற்றி இருக்கின்றார். அந்தக் காலங்களில் மேற்குலக நாடுகளுக்கு நான் எங்கு பயணித்தாலும் என்னுடன் அவரும் இணைந்து இருப்பார். என் நட்புக் காரணமாக இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றும் புலிகள் தரப்புடனும், அரசுப் பிரதிநிதிகளோடும் அவருக்கும் நன்கு பரிச்சயம் இருந்தது. மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் மற்றும் பேச்சுக்களுக்கு செய்தி சேகரிக்க வரும் ஏனைய பத்திரிகையாளர் எல்லோரும் இவருக்கு நண்பரே.

இவரது வீடு டுஸில்டோர்வ் நகரில் இருப்பதால் சர்வதேச வர்த்தக கண்காட்சி நடைபெறும் சமயங்களில் பலதடவைகள் அவற்றுக்குச் சென்று வரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஆக டுஸில்டோர்வ் நகர விமான நிலையத்தில் அல்லது ரயில் நிலையத்தில் போய் இறங்கும் ஏற்பாட்டை மாத்திரம் நான் பார்த்துக் கொண்டு, நேரம் திகதி ஆகியவற்றை அறிவித்தால் போதும். நான் திரும்பி வரும் வரையான சகல ஏற்பாடுகள், விடயங்களையும் - ஏன் முழுச் செலவுகளையும் கூட - தானே கவனித்துக் கொள்வான் என் நண்பன் குகதாசன். நான் குடும்பமாகவும் போய் அவன் வீட்டில் டேரா போட்டு இருக்கிறேன்.



ஜேர்மன் கண்காட்சியில் அச்சியந்திரத்தின் சுவிச் பகுதியைப் பார்வையிடும் சிவநாயகம் ஐயா.



ஜேர்மன் பயணம் முடித்துக் கொண்டு நாடு திரும்பிய சமயம் சிவநாயகம் ஐயா.

எண்பதுகளின் பின்னர் அவ்வாறு சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு செல்வதும், கண்காட்சியைப் பார்வையிடுவதும் அப்படி ஒன்றும் பெரிய விடயமாக இல்லை. புதிய மிலேனியத்தின் முதல் தசாப்தத்தில் இப்படி ஜேர்மனி, புதுடில்லி போன்ற இடங்களில் நடந்த பல சர்வதேச கண்காட்சிகளை நான் நேரில் பார்த்திருக்கிறேன். நாள் கணக்கில் நேரத்தைச் செலவிட்டு நவீன அச்சுக்கலையின் விஸ்வரூபப் பாய்ச்சலைப் பார்த்தும் அறிந்தும் வியக்கித்திருக்கிறேன்.

ஆனால் அறுபதுகளில் இலங்கையிலிருந்து அப்படி சர்வதேச கண்காட்சியில் பங்குபற்றுவது என்பது பெரிய விடயமாக இருந்தது.

நானாவது நாட்டின் பத்திரிகை ஒன்றின் அச்சக முகாமையாளராகவும், அந்நிறுவனம் நடத்திய ஓர் வர்த்தக அச்சகத்தின் பிரதான பங்குதாரனாகவும் இருந்தேன். அதனால் இத்தகைய சர்வதேச கண்காட்சிகளை நேரில் போய்ப் பார்க்க வேண்டிய தேவையும், அவசியமும், காரணங்களும், வாய்ப்புகளும் எனக்குத் தாராளமாக இருந்தன. ஆனால் சிவநாயகம் ஐயா முழுக்க முழுக்க பத்திரிகையாளர். ஒரு ஜேர்னலிஸ்ட். இயல்பாக அச்சகத்துறையில் ஈடுபாடும், பரிச்சயமும், அறிவும் அவருக்கு இருந்தனவே தவிர, அவர் அத்துறையில் ஒரு தொழில் பிரமுகர் அல்லர்.

ஆயினும் அறுபதுகளில் அவர் சார்ந்திருந்த சுயாதீன பத்திரிகா சமாஜம், தமக்குரிய ரோட்டரி அச்சு இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய முன்னர் அதன் செயன்முறையை நேரில் அவதானித்து, படித்தறிந்து, பரீட்சித்துப் பார்த்து, தீர்மானிப்பதற்காக அவரை ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச அச்சகக் கண்காட்சிக்கு நேரடியாக அனுப்பியிருந்தது. ஜேர்மனியில் இருந்து அவர் அதனைப் பார்த்துப் படித்து, அது பற்றிய பரிந்துரையை வழங்கிய பின்னரே அந்த அச்சியந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் சுமார் 25 ஆண்டுகளுக்கு அந்த ரோட்டரி மெஷின் அந்த நிறுவனத்தில் கோலோச்சியது. தினசரி லட்சத்திற்கும் மேற்பட்ட பத்திரிகைப் பிரதிநிதிகளை அது மும்மொழியிலும் அச்சிட்டுத் தள்ளியது.

சுமார் இரண்டு தசாப்த காலத்தில், அடுத்த தலைமுறை ஓவ் செட் இயந்திரங்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படும் வரை அந்த ரோட்டரி மெஷினும், லைனோ முறையில் அச்சுக் கோர்க்கும் முறைமையுமே நின்று நிலைத்து நீடித்தன.

ஒரு பத்திரிகை ஆசிரியராக இருந்து கொண்டு, ஒரு பெரிய அச்சக நிறுவனத்தின் சார்பில் அதன் பிரதிநிதியாக சர்வதேசக் கண்காட்சிக்குப் போய், நவீன இயந்திரங்களைப் பார்வையிட்டு, ஒரு தேசிய பத்திரிகை குழுமத்துக்கான பத்திரிகைகளை அச்சிடுவதற்குரிய அச்சியந்திரத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு சிவநாயகம் ஐயாவிடமும் வழங்கப்பட்டிருக்குமாயின், அச்சுத் துறை சார்ந்த அவரின் பரந்த அறிவை நாம் அளவிட முடியும்.

அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அவர் வெறும் பத்திரிகை ஆசிரியராக மட்டும் மேன்மையுறவில்லை. கூடவேதாம் சார்ந்த தொழில் துறையோடு சம்பந்தப்பட்ட அச்சுத்துறையிலும் இரண்டறக் கலந்து, அதில் தோய்ந்து அவர் முன்னேறினார்.

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் தனியாக சித்ரா ஸ்டுடியோ வைத்திருந்த காலத்திலேயே அவர் 'உதயம்' என்ற சஞ்சிகையை வெளியிட்டவர் அல்லவா? அப்போதும், அதற்கு முன்னர் இந்தியாவில் இருந்த காலத்திலும் இருந்தே அச்சுத்துறையோடு தம்மைப் பிணைத்துக் கொண்டார் அவர். அதன் நுணுக்கங்களை, நுட்பங்களை, தொழில்முறை சொல்லாடல்களை கூர்ந்து கவனித்து உள்வாங்கிக் கொண்டார். அந்தந்தக் காலத்துக்குரிய நவீன அச்சு முறைமைகள் குறித்து சிவநாயகம் நன்கு அறிந்து, அவற்றில் விற்பன்னராக இருந்தார் என்பதை அவருடன் பழகிய பலரும் விதந்துரைப்பர்.

1988 முற்பகுதியில் ஆனந்த விகடன், ஜூனியர் விகடனில் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றியபடி இரவில் அந்நிறுவனத்தின் அச்சக பிரிவில் ஒரு பயிற்சி மெஷின் மைண்டராகவும் நான் பணிபுரிந்தேன் என்று இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். பயிற்சி மெஷின் மைண்டருக்குரிய சீருடை அணிந்து இரவில் சுமார் மூன்று, நான்கு மாதங்கள் நான் பயிற்சி பெற்றேன். நவீன ஓவ் செட் அச்சு முறையின் நுணுக்கங்கள் பற்றிய ஓர் அடிப்படை அறிவைப் பெறும் என் ஆசையினால் கிட்டிய வாய்ப்பு அது.

அந்தப் பயிற்சியை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய நான் யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னர் சிவநாயகம் ஐயாவை அவரது பம்பலப்பிட்டி இல்லத்தில் சந்தித்தேன் என்று நினைவு. அப்போது நான் பெற்ற பயிற்சி குறித்து அவர் நோண்டி நோண்டிக் கேள்விகளை எழுப்பிய போது தான் இவர் ஓய்வில் வீட்டில் இருக்கவில்லை, உலகம் முழுவதும் நடக்கும் நவீன அச்சு முறைப் புரட்சி பற்றியும் விவரங்களை அறிந்து நுனி விரலில் வைத்திருக்கின்றார் என்ற உண்மையை நான் புரிந்து கொண்டேன்.

(வளரும்....)



2001 இல் புதுடில்லி அச்சகக் கண்காட்சி ஸ்டோல் ஒன்றில் நான். திருகோணமலை உதயன் அச்சக நிர்வாகியான என் தாய் மாமன் தர்மராஜா, கொழும்பு லீலா அச்சக உரிமையாளர் சி.தேசபந்து ஆகியோரும் காணப்படுகின்றனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**அங்கம் - 137**

**367. யாராவது அப்படியான ஆவணங்களை பெற்றார்களா?**

பின்நாள்களில் நாடு கடந்த அரசாங்கம் மூலம் அது இயங்கிய நாடுகளின் பிரஜைகள், மேலதிகமாக தமிழ் ஈழத்தின் குடிமகன் என்ற இரட்டைக் குடியுரிமை (Dual Citizenship) ஆவணங்கள் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என அறிந்தேன். எவ்வளவு விகிதம் அவை செயல்படுத்தப்பட்டன என்பதைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. தாகத்திற்குதான் தண்ணீர். அதற்குத்தான் பந்தல்கள் போடுவார்கள். காலங்கள் மாறிய நிலைகளில் எங்களது சந்ததியின் பிள்ளைகளே ஊடகங்களின் விளம்பரங்களினால் தண்ணீர் எனக் கேட்டால் கொக்ககோலாவைத் தான் சிந்திக்கிறார்கள். அது போல எங்களது விடுதலை சிந்தனைகளும் நாடு கடந்த நிலையில் நகர்கிறது.



ஐ.நா. புகழ் வைகுந்தவாசன்

சில காரியங்களை அவற்றை செய்வதினால் தான் ஒரு முடிவை பலனை காணலாம். பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான நடைபயணம் போல ஒன்றினை செய்ததால் கண்ட எழுச்சியை உவமானமாகக் கொண்டு பார்த்தால், போர்வெடிக்கும் என்று பேசிக்கொண்டு, செய்ய வெளிக்கிட்டால் வரக் கூடிய பிரச்சினையை எப்படிசமாளிப்பது என கையைப் பிசைந்தபடி நிற்போரை என்ன செய்வது?

இப்படியான வெதுவெதுப்பான வரலாறுகள் பல. 1961 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்படுத்திய சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றிய மக்கள், தொண்டர்கள் இரவும் பகலும் மாறிமாறி அரச இயந்திரத்தை இயங்கவிடாது தடுத்து, உரிமைப் போர் குரல் கொடுத்து, எங்களுக்கான ஆட்சியை எங்கள் கையில் எடுப்போம் என்ற சவாலுக்காகத் துணிச்சலுடன் கிளர்ந்து நின்றார்கள். அன்றைய தலைவர்கள் தமிழருக்கென தனியாகத் தபால் முத்திரைகளை அச்சடித்து வெளியிட்டமை நினைவிருந்திருக்கலாம். முத்திரைகள் வெளியானவுடனேயே அரசாங்கம் தடியடி பிரயோகித்து அவர்களை அப்புறப்படுத்தியதுடன், அடிக்கப்பட்ட முத்திரைகளும் விற்பனைக்கு வராமல் தலைவர்களால் முடக்கப்பட்டன. வீட்டுக்கு வீடு தன்னும், தமிழரசு அந்த




பிரதமர் இந்திரா காந்தியுடன் வைகுந்தவாசன்

முத்திரைகளை தமிழ் மக்களுக்கு விற்கவோ, தரவோ இல்லை. சவாலும் அடங்கிப் போனது. இவை எல்லாம் சவடால் சவாரித் தம்பர்களின் வேலைகள் எனக் கணக்கிட்டே அரசாங்கங்கள் பயணித்தன - விடுதலைக்கென இளைஞர்கள் புறப்படும் வரை.

**368. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (Tamil Co - ordinating Committee) பற்றி குறிப்பிட்டீர்களே? அவர்களது பணி என்ன?**

அது சுவராசியம் மிக்கதுதான். ஆனால் அதனை அறிவதற்கு முன் வேறு சில சம்பவங்ளை அறிந்து கொள்ளவேண்டும்.

5 ஒக்டோபர் 1978 ரோயிட்டர் செய்தி நிறுவனம் சர்வதேசத்துக்கு ஒரு செய்தியை பகிர்ந்தது. அந்தச் செய்தி ஸ்ரீலங்காவின் தமிழ் இனப் பிரஜை ஒருவர் அன்று ஐ.நாவின் மேடையை அத்துமீறி




வைகுந்தவாசன் பற்றிய நூல்

பாவித்து, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேசுமுன்பு நாட்டில் தனது இனமக்களின் நிலைபற்றி பேச முயன்றார். சில நிமிடங்களே அவர் பேசினார். ஏனெனில் அவர் அத்துமீறியவர் என



பின்னர் பேசிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத்

அறியப்பட்டதும் அவரது பேச்சு துண்டிக்கப்பட்டது. அவர் பின்பு சபையின் பாதுகாப்புப் படையினரால் வெளியேற்றப்பட்டார் என்பதுவே அச்செய்தி.

பேசியவர் வெளியேற்றப்பட்டதின் பின் பேசிய வெளிவிவகார மந்திரி ஏ.ஸி. எஸ்.ஹமீத் தனக்கு முன்னால் தனக்கு தரப்பட்ட சில நிமிடங்களை எடுத்து பேசியவர் பரபரப்பான உணர்ச்சியை ஏற்படுத்த முனைந்தார், அதன் மூலம் எனது பேச்சுக்கு ஓர் ஆவலை ஏற்படுத்தியதற்கு நான் நன்றியாக இருக்கவேண்டும் எனத் தனது பேச்சைத் தொடங்கினார். பாதுகாப்பு அதிகாரிகளின் விசாரணையிலிருந்து தப்பி, மன்றத்துக்கு உள்ளே போகத் தேவையானவற்றை அவர் ஏதோ வழிகளில் கடந்து, பல பிரதிநிதிகள் சமமாகச் செல்லும் நேரத்தில் அவர்களுடன் கூட்டத்தில் ஒருவராக உள்சென்று, ஒரு பக்கத்தில் அமர்ந்து, ஸ்ரீலங்காப் பிரதிநிதியின் உரை என்று அறிவித்தல் வந்தபோது எழுந்தோடி ஏ.ஸி.எஸ்.ஹமீத் வருவதற்கு முன் பேசினார் என அறிவிக்கப்பட்டது. வழமையாக அந்த வாசல்களினால் பிரதிநிதிகளும் அவர்களது விருந்தாளிகளும் பல இன மக்களும் உட்செல்வதால், வாசலிலேயே ஒவ்வொருவராகத் தடுத்து அடையாளப்படுத்தும் வழமை இருப்பதில்லை. அது அவருக்கு வசதியாகி விட்டது எனவும் அறிவித்தார்கள்.

அதனைச் செய்தவர் கிருஷ்ணா வைகுந்தவாசன். பின்னர் "ஐ.நா." எனப் பெயருடன் இணைத்து தமிழ் மக்களிடையே அறியப்பட்டவர்.

அவர் சட்டத்தரணியாக ஸ்ரீலங்காவின் நீதித்துறையில் சேவையாற்றியவர். பின்னர் வேறு சில நாடுகளில் பணிபுரிந்து, இங்கிலாந்தில் குடியேறி அங்கும் தனது சட்டத்தரணி வாழ்க்கையை தொடர்ந்தவர்.

1965ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் தந்தை செல்வாவுக்கு எதிராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 958 வாக்குகள் பெற்றவர். அவர் சட்டத்துறையில் பணியாற்றிய நாள்களிலேயே கூரிய புத்தி, ஆனால் சிந்தனைகளில் தாமதமானவர் என்ற அபிப்பிராயம் பெற்றவர். அவர் அன்று பேசியது.

"மதிப்புக்குரிய இந்த சபையின் தலைவரே, உலக நாடுகளின் தலைவர்களே, அடக்கப்படும் சிறுபான்மை நாடுகளான தமிழீழம் போன்றவை இந்த உலகளாவிய உயரிய மன்றத்துக்கு சமர்ப்பணங்கள் செய்ய முடியாதெனில், நாங்கள் எங்கு போவது? என்னுடைய பெயர் கிருஷ்ணா. நான் இரண்டரை மில்லியன் மக்களைக் கொண்ட தமிழீழம் எனப் பெயர் கொண்டு, ஸ்ரீலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடைப்பட்ட பகுதியான நாட்டிலிருந்து வருகிறேன். ஸ்ரீலங்கா அரசானது தனது தொடர்ந்த இனப்படுகொலை என்ற போக்கினால் தமிழ் ஈழம் என்ற தேசத்தை நசுக்குவதிலேயே குறியாக இருக்கிறது. இந்தியக் கடல்பிராந்தியத்தின் அமைதியைக் குலைக்கக் கூடிய வலு இந்தப் பிரச்சினைக்கு உண்டு. அது பலஸ்தீனம், சைப்பிரஸில் எழுந்தவை போல், பாரதூரமானதாக வளரலாம். உலக நாடுகளின் தலைவர்களாகிய நீங்கள் உடனடியாக இதில் ஈடுபட்டு தடுத்து நிறுத்தக் கோரி உங்களிடம் அதற்காகக் கையேந்தி நிற்கிறோம். நான் அனுமதியில்லாமல் பேசியதற்காக மன்னிக்கவும். தமிழீழம் தொடர்ந்து வாழவேண்டும்."

ஆகவே இனப்படுகொலையும், இந்தியப் பிராந்தியமும் 1978 இல் ஐ.நாவில் ஒலித்தது.

(வளரும்......)

# தென்னிலங்கை ஆசிரியர்கள் தொடர்பாக அரசு போலியான குற்றச்சாட்டு முன்வைப்பு

தென்னிலங்கையிலே ஓர் இனவாதத்தைத் தூண்டும் வகையிலே ஆசிரியர்கள் செயற்படுகின்றார்கள் என்றும் வடக்கிலும் கிழக்கிலும் சுமுகமாகக் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் தென்னிலங்கை ஆசிரியர்கள் தான் தெற்கிலே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் புறக்கணித்துச் செயற்படுகின்றனர் எனவும் இந்த அரசு போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து உள்ளது என ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் திலீபன் தீசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஊடக சந்திப்பொன்று நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றுள்ளது. இந்த ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு –

இந்த பத்திரிகையாளர் சந்திப்பு இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டுமேற்கொள்ளப்படுகிறது.ஒன்று, தென்னிலங்கையிலே ஓர் இனவாதத்தைத் தூண்டும் வகையிலே ஆசிரியர்கள் செயற்படுகின்றனர் என்றும் வடக்கிலும் கிழக்கிலும் சுமுகமாகக் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் தென்னிலங்கை ஆசிரியர்கள்தான் தெற்கிலே மாணவர்களின் கல்விநடவடிக்கைகளைப்புறக்கணித்துச் செயற்படுகின்றனர் எனவும் இந்த அரசு போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உள்ளது.

இதனை முற்றுமுழுதாக மறுக்கின்ற கோணத்திலேயே இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த பத்திரிகையாளர் சந்திப்பின் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறது. வடக்கைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஒன்லைன் கல்வி முறைகளும் இடம்பெறுவதில்லை.

ஆசிரியர்கள்முழுமையாகஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்துக்கு ஆதரவு வழங்குவதோடு, சுயமாகவே தங்களுடைய பாடசாலை ஆசிரியர் சங்கங்கள் ஊடாகவே ஆசிரியர்கள் குழுக்கள் இணைந்து இந்த பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்வதோடு, ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பிற்கு முற்றுமுழுதாக தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையிலேயே ஒரு பொய்யான பிரச்சாரத்தை தெற்கிலே செய்து வடக்கு கிழக்கில் ஒன்லைன் மூலம் கேள்விகள் இடம்பெறுகின்றன எனவும், திட்டமிட்டு கல்வி புறக்கணிக்கப்படுவதாகவும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் அரசதரப்பு மேற்கொண்டுள்ளது.

ஒரு சூழ்ச்சி நிறைந்த செயற்பாடாக அமைந்த இதன் மூலம் இந்த அதிபர் ஆசிரியர் சங்க தொழிற்சங்க போராட்டத்திற்கு எதிராகத் தென்னிலங்கையில் உள்ள பெற்றோர்களையும் மாணவர்களையும் தூண்டுகின்ற ஒரு நோக்கத்துக்காகத் தான் இந்த செயற்பாடு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த விடயத்தை ஆரம்பத்திலிருந்து நீங்கள் பார்க்கலாம். எல்லா மாவட்டங்களிலும் மாகாணங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளாக இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையிலேயே இத்தகைய பிரசாரத்தைத் தான் இந்த அரசு மேற்கொண்டிருந்தது.

அதாவது வடக்கு கிழக்கில் எந்தவிதமான ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெறவில்லை. தென்னிலங்கையில் மட்டும்தான் இடம்பெறுகிறது.

அங்கு அவர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை என்ற கோணத்தில் சொல்லிக் கொண்டிருந்த வேளையிலே வடக்கு–கிழக்கில் நாங்கள் ஆர்ப்பாட்டம் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் அவர்கள் தங்களுடைய பொய் பிரசாரங்கள் பொய்யாகப் போகின்றதே என்பதைக் கருத்திற்கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் போராட்டங்கள் இடம்பெறாத வகையில் அதனை நசுக்கத் தொடங்கினார்கள்.

அரச புலனாய்வாளர்களும், பொலிஸாராலும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களாலும் எங்களுக்குப் பல நெருக்குவாரங்கள் தரப்பட்டிருந்தன. அனைவருக்கும் தெரியும் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கானோர் இணைந்து மேற்கொண்ட போராட்டத்தைத் தடுக்கும் வகையில் நீதிமன்றத்தில் தடை உத்தரவைக் கூறி பொலிஸார் சென்றிருந்தனர். அதற்கு நீதிவான் அனுமதி வழங்கவில்லை.

அதன் காரணமாக அவர்கள் எங்களைக் கைது செய்வதற்காக வந்து நடந்து கொண்ட விதம் தொடர்பாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகவே எங்களைக் கைது செய்ய முடியாத ஒரு சூழலில் கடைசியாக அவர்கள் மேற்கொண்ட ஓர் ஆயுதம், அதாவது எங்களை நெருக்குகின்ற வடக்கு கிழக்கில் இருக்கின்ற ஆசிரியர்சமுதாயத்தைஅச்சுறுத்துகின்ற கோணத்திலேயே அவர்கள் செய்த ஒரே ஒரு விடயம் பேரணியில் கலந்து கொண்ட வாகனத்தைத் தடுத்து நிறுத்தி 15 நாள்களின் பின்னர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு அதனை நாங்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆகவே, அவர்கள் மேற்கொண்ட பொய் பிரசாரங்களை உண்மையாக்க இந்த விடயங்கள் நடந்தன.

இதேபோன்று தான் இன்றும் வடக்கிலே ஆராய்ந்து பார்த்தோமானால் எவ்வளவு விகிதம் ஒன்லைன் கல்வி முறை இடம்பெறுகின்றது என்பது உங்களுக்கே தெரியும். ஆனாலும் அவர்கள் போலியான பிரசாரத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, இதன் மூலம் எங்களுடைய போராட்டத்தை வந்து நசுக்க முடியாது. நாங்கள் இலங்கை முழுவதும் இருக்கின்ற ஆசிரியர், அதிபர்கள் 24 வருடமாக இருக்கின்ற உங்களுடைய சம்பள முரண்பாடு போன்ற எங்களுடைய அடிப்படை உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இனவாதத்தைத் தூண்டி இந்த ஆசிரியர்களுடைய போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்கின்ற இந்த அரசாங்கத்தினுடைய செயற்பாடுதான் இங்கு நாங்கள் முதன்மையாகப் பார்க்க வேண்டிய விடயம் .

இரண்டாவது விடயம் இந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்பது ஆசிரியர்களுக்கு லஞ்சம் வழங்குகின்ற ஒரு செயற்பாடாகத் தான் நாங்கள் பார்க்கவேண்டும். அதாவது நாங்கள் கேட்பது இந்த அரசாங்கம் பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவை நியமித்து சுபோதினி ஆணைக்குழுவின் ஊடாக அதனை அங்கீகரித்து நீங்கள் இந்த ஆசிரியர்,அதிபர் முரண்பாடு தொடர்பாக அதனை நீக்குவது தொடர்பானதையே நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அதற்கு அரசாங்கம் என்ற வகையில் நீங்கள் உங்களுடைய போராட்டம் உச்சம் பெற்று இருக்கின்ற நிலையில் பல்வேறு அமைச்சரவை தீர்மானங்கள் ஊபாக பல தடவை ஆராயப்பட்டு அமைச்சரவை உப குழு ஒன்றை நியமித்து இருந்தீர்கள். அமைச்சரவை உப குழு இடைக்கால கொடுப்பனவை வழங்க முன்மொழிந்திருந்தது.

அந்த அமைச்சரவை உப குழு இடைக்கால கொடுப்பனவை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்த நிலையில் போதனை அழைக்கையில் உடைய ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்த இடத்திலும் அந்தக் இடைக்கால கொடுப்பனவை நான்கு வருடங்களாகத் தான் பிரித்துக் கொடுப்போம் என அரசாங்கம் தெரிவித்தது.

அந்த இடத்தில் நாங்கள் இந்த கொடுப்பனவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகின்ற தருணத்தில் இன்று என்ன சொல்லுகிறார்கள் என்றால் இணையவழிக் கற்பித்தலை ஆசிரியர்கள் முழுமையாகப் புறக்கணித்து இருக்கின்ற நிலையில் இணையவழிக் கற்பித்தலைச் செய்கின்ற ஆசிரியர்களுக்கு மாத்திரமே தாங்கள் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவோம் என்று சொல்வது அது ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தை நீத்துப்போவதற்கான அரசாங்கத்தினுடைய ஓர் அடிமட்ட சிந்தனையை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த அரசாங்கம் பல ஊழல்களோடு தொடர்புடைய ஓர் அரசாங்கம் , ஆகவே இவ்வாறான ஓர் அரசாங்கம் ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கி அவர்களுடைய போராட்டத்தை மழுங்கடிப்பதற்குத் துணைபோகின்றது. ஆகவே ஆசிரியர் சங்கம் என்ற வகையில் நமது பார்வை இவ்வாறாக அமைந்துள்ளது.

லஞ்சம் ஊழல்களை முன்னெடுத்த ஆளுநருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக 19 கோடி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறாக லஞ்ச ஊழலில் ஈடுபட்ட ஆளுநருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு இந்த அமைச்சரவை 19 கோடி ரூபாவை வழங்குவதற்கு அனுமதி வழங்குகின்றது.

அப்படி என்றால் இந்த அரசாங்கமும் அந்த ஆளுநருடன் இணைந்து பல சுரண்டல்களைச் சுரண்டி இருப்பது வெளிச்சத்துக்கு வருகின்றது. ஓர் ஊழல் மோசடியில் ஈடுபட்டவருக்கு 19 கோடி ரூபாவை வழங்குவதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்குகின்றது.

இவ்வாறாக லஞ்சம் ஊழல் மோசடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் எங்களுடைய உண்மையான பிரச்சினையை விளங்கிக் கொள்ளாமல் ஒரு 5 ஆயிரம் ரூபா பிச்சைக் கொடுப்பனவு போல வழங்கி இந்தப் போராட்டத்தை நீர்த்துப் போக இந்த அரசாங்கம் துடிக்கிறது என்றால், ஆசிரியர்கள் நாங்கள் பரந்துபட்ட வகையில் சிந்திக்க வேண்டிய இடத்தில் இருக்கின்றோம்.

இந்த அரசு வழங்குகின்ற இந்த 5 ஆயிரம் ரூபா பிச்சை கொடுப்பனவிற்கு அல்லது லஞ்சத்திற்கு நாங்கள் இந்த போராட்டத்தை விட்டுக்கொடுக்கப் போகின்றோமா என்பதுதான் பிரதானமான விடயமாகும்.

இந்தப் பிரச்சினை சரியான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது, சுபோதினி குழுவின் அறிக்கை வந்து, இடைக்கால சம்பளம் கொண்டுவரப்பட்டுள்ளது மேலும் எமது போராட்டம் ஒரு முக்கியமான இடத்தில் உள்ளது மேலும் நாம் அடைய வேண்டிய நோக்கம் என்பது மிக அருகிலேயே உள்ளது.

ஆகவே இந்த 24 வருடமுரண்பாட்டில் நாங்கள் பலதடவைகள் ஏமார்ந்திருக்கின்றோம். இனியும் தொடர்ந்து நாங்கள் ஏமாறத் தயாரில்லை. இந்த மக்களும்பெற்றோரும்சமூகத் தரப்புக்களும் ஒன்றைச் சிந்திக்க வேண்டும்.

24 வருடமாகத்திட்டமிட்டுதன்னுடைய உரிமைக்காகத் தங்களுடைய நலனுக்காகப் பாதிக்கப்பட்ட இந்த ஆசிரியர்கள் ஒரு சமூக நலனுக்காக தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை என்று சொன்னால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது.

நாங்கள் ஒரு மாணவர் சமுதாயத்திற்கோ அல்லது இந்த சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்க முடியுமா என்றொரு கேள்வியை நீங்கள் எல்லோரும் கேட்க வேண்டும். வெறுமனே இது ஒரு மாணவர்களின் கல்வி பாதிப்பு என்று இன்று நாங்கள் நினைத்தால் நாளை இந்த ஆசிரியர் தொழிலுக்கு எவருமே வரமாட்டார்கள். இந்த சமுதாயத்தைக் கட்டி வளர்க்கின்ற இந்த ஆசிரியர் தொழிலில் இவ்வளவு பிரச்சினைகள் உள்ளன. மிக மோசமான சம்பளப் பிரச்சினைகள் இருக்கின்றன, செய்யும் தொழிலுக்கேற்ற கொடுப்பனவு இல்லை. இந்த இடத்துக்கு இன்னுமொரு ஆசிரியர் சமுதாயம் வராது போனால் ஒட்டுமொத்த இனமும் பாதாளத்தில் தள்ளப்படும்.

ஆகவே மாணவர்களும் பெற்றோர்களும் இந்த ஆசிரியர்களினுடைய நிலையை அறிந்து செயற்பட வேண்டும் எனவும் மேலும் இந்த அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற அற்பத்தனமான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஆசிரியர்கள் நம்பி இந்தப் போராட்டத்திலிருந்து விலகாது எங்களுடைய இந்தப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு எங்களுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என அனைத்து ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



*யாழ்ப்பாண பல்கலைக்கழக சுகநல நிலையத்தின் பாவனைக்காக யாழ்ப்பாண மருத்துவ பீட கனடா பழைய மாணவர்களினால் நான்கு பல்ஸ் ஒக்ஸிமீற்றர்களும், டிஜிற்றல் வெப்பமானியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.*

*யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவிடம், யாழ்ப்பாண மருத்துவ பீட கடல் கடந்த பழைய மாணவர் அமைப்பின் (*Jaffna Medical Faculty Overseas Alumni - Canada*) கனடா கிளைத் தலைவர் மருத்துவர் மயில்வாகனம் மயிலாசன் கையளித்தார்.*

*இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவக் கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.*



செ.ரமேஸ் மதுசங்க,
(ஊடகக்கற்கைகள் துறை,
நான்காம் வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# தடம் மாறிப்போன தமிழர் விளையாட்டுக்கள்

'மாலை முழுவதும் விளையாட்டு, அதை வழக்கப் படுத்திக் கொள்ளு - பாப்பா' என விளையாட்டின் வீரியத்தை வீதிதோறும் எடுத்துச் சென்றார் பாரதி. இன்றைக்கு வீதிகள் இருக்கின்றனவே தவிர விளையாட்டுக்களைக் காணமுடியவில்லை.

பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பவை வெறுமனே விளையாட்டுக்கள் மட்டுமல்ல. நம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எடுத்துச் சொல்லும் சான்றுகளுமாகும். தமிழர்கள் போர்த்தொழிலில் ஈடுபட்டு வந்த காலம் வரையில் நாட்டுப்புற விளையாட்டுக்களின் அடர்த்தி குறையவில்லை. இரா.பாலசுப்பிரமணியம் எழுதிய 'தமிழர் நாட்டு விளையாட்டுக்கள்' நூல் முன்பு தமிழர்களிடம் வழக்கிலிருந்த, வழக்கிலிருந்து கொண்டிருக்கின்ற விளையாட்டுக்களை ஆவணப்படுத்துகின்றது.

இன்றைய சமுதாயத்தில் திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், வலைத்தளங்கள் நம் சமூகத்தை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. இதனால் சிறுவர்கள் 'கம்பியூட்டர் கேம்ஸ்', மேல்நாட்டு விளையாட்டுக்கள் என அடிமையாகி விடுகின்றனர். தற்போது விளை



யாடுவதற்குக் கூட நேரம் இல்லாமல் கல்வியில் போட்டி என்ற பெயரில் அளவிற்கு அதிகமான வீட்டுப் பாடங்களை திணிப்பதால் அவர்கள் விளையாட்டை மறந்தே போய்விட்டார்கள். சிறிது ஓய்வு கூட இல்லாமல் மேலதிக வகுப்புக்கள், கணணி வகுப்புக்கள் என்பவற்றிற்கு அனுப்புகின்றனர். இதனால் சிறுவர்கள் விளையாட்டைப் பற்றி சிந்திப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை.

விளையாட்டுக்கள் மட்டுமல்ல, தமிழர் பாரம்பரிய கலாசார அடையாளங்களும் மறந்தும் மறைந்தும் போவது கவலைக்குரியதே.

உடல்திறன், அறிவுத்திறன், விவேகம், மகிழ்ச்சி, தன்னம்பிக்கை என்பவற்றை கற்றுத்தந்த பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்பில் நமது தலைமுறையினருக்குத் தெளிவும் விளக்கமும் அனுபவமும் இல்லையென்றே கூறலாம். நமது உடலின் வியர்வைத் துளிகள் மண்ணைத் தொட்டு நனைத்த அவ் விளையாட்டுக்களில் நம் தேக ஆரோக்கியம் இயல்பாய் கிடைத்தது. நோயின்றி, மருத்துவம் இன்றி, தெம்பாய்த் திரிந்த நம் சிறுவர், இளையோர் மத்தியில் இப்போது இழையோடிப் போயுள்ள இணைய விளையாட்டுக்களில் பயன் தான் என்ன? இணைய வசதியால் சிறுவர்கள் வீடியோ கேமிலும், தொலைபேசி உரையாடல்களிலும் தமது பொழுதைக் கழிப்பது தற்போதைய வசதியென ஆகிவிட்டது. கூடிக் கூடி, மகிழ்ந்து, விளையாடிய சிறுவர்கள் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்து தனிமையில் பொழுதைக் கழிக்கின்றார்கள். இன்று சிறுவர்களை வீதியில் விளையாட விடாது தடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எத்தனை பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வீதியில் விளையாட விட்டுப் பார்த்து ரசிக்கின்றார்கள்?

பாரம்ரிய விளையாட்டுக்கள் குறித்த நேரத்தில் ஒன்றாய் இணைந்து, தமக்கான விதிகளை இட்டு, மகிழ்ச்சியாக விளையாடும் விளையாட்டு வகை ஆகும். அவ்வகையான விளையாட்டுக்கள் பச்சைக் குதிரை, சிலம்பாட்டம், ஆடுபுலி ஆட்டம், கபடி, திருடன் - பொலிஸ், பல்லாங்குழி, குலை குலையா முந்திரிக்கா, நொண்டி விளையாட்டு, பட்டம் ஏற்றல், கிளித்தட்டு, போர்த் தேங்காய் உடைத்தல், சிரட்டைப் பந்து, வண்டிச்சவாரி, நாயும் புலியும், ஊஞ்சலாடுதல், வழுக்கு மரம், தாயம் என்பனவாகும். இவ் விளையாட்டுக்கள் சிறுவர்கள், இளைஞர்களால் விரும்பப்பட்டு விளையாடப்பட்டன.



அந்தவகையில் சில விளையாட்டுக்களைப் பார்போமேயானால்,

பச்சைக் குதிரையில் ஒருவர் குனிந்து இருப்பார். மற்றையவர் அவர் முதுகில் கையை ஊன்றி தாவிச் செல்லல் வேண்டும். இவ் விளையாட்டின் மூலம் உருவானதே நீளம் பாய்தல், உயரம் பாய்தல் என்பனவாகும்.

பாரம்பரிய விளையாட்டுக்களில் நொண்டியும் ஒன்றாகும். ஒற்றைக் காலை தூக்கிக் கொண்டு நொண்டியாக விளையாட வேண்டும். இவ் விளையாட்டின் மூலம் காலில் உள்ள இரத்த ஓட்டம் சீராக இயங்கும். மன அழுத்தம் குறையும். கை கால் வலிகள் குறையும்.

இளைஞர்களால் அதிகம் விளையாடப்படும் விளையாட்டாக கிட்டியடித்தல் உள்ளது. கிட்டியும் புள்ளும் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டு குழுக்கள் பிரிக்கப்படும். கிட்டியடித்தலில் சிறு குழியின் மேல் புள்ளை வைத்து கிட்டியால் எறியப்படும். அப்புள்ளை பிடிப்பதற்கு அனைவரும் ஓடுவார்கள். புள்ளை பிடித்தால் ஆட்டக்காரர் போட்டியில் இருந்து நீக்கப்படுவார்.

புத்தியை கூர்பட வைக்கும் தாயம் விளையாட்டும் தழிழர்களின் விளையாட்டாகும். 4 அல்லது 8 பேர் சேர்ந்து விளையாடலாம். முதலில் தாயம் போட்டவர்கள் உள்ளே சென்று காய் நகர்த்தி விளையாடுவார்கள். நேரம் போவதே தெரியாது.


'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்று உலகத்திற்கே உரக்கச் சொன்னது நமது பாரம்பரியம். நம் தொன்மை விளையாட்டுக்களே இக் கூற்றின் அடிச்சொல்லாக அமைந்தன. குழுக்களாக இணைந்து, தமக்குள் புரிந்துணர்வை ஏற்படுத்தி, கூடி நின்று வெற்றி பெறும் மனநிலை திடமாய் காணப்பட்டது. ஆனால் இன்று சிறுவர்களும் இளைஞர்களாயினும் இணைய விளையாட்டக்கள், கார்ட்டூன், இமைய வரிசைகளிலும், தொலைபேசி உரையாடல்களிலும் காலத்தைக் கழிக்கின்றார்கள்.


விளையாடடில் ஆளிடைத்தொடர்பாடலை நேர் நின்று அனுபவித்த அங்கலாய்ப்புக்கள் எல்லாம் மாறிப்போக இனந்தெரியாத எவரெவரையோ இணைத்து விட்டது இணைய விளையாட்டுக்கள்.

எதிர்கால தலைமுறையினருக்கு பாரம்பரிய விளையாட்டுக்கள் மறந்து போகும் நிலைய உள்ளது. படிப்பு, பணி, சமூக அந்தஸ்து போன்ற நவீனச் சூழல் பெருகத் தொடங்கிய போதும், குறிப்பாக உலகமயமாதலால் ஏற்பட்ட தொழில்வழிப் புலம்பெயர்வுகள் நிகழத் தொடங்கிய போதும், கூடவே நாட்டுப்புற விளையாட்டுக்கள் பலவும் மறையத் தொடங்கின என்பது உண்மைதான்.

'நாட்டுப்புறக் கலை இலக்கிய ஆய்வாளர்கள், மானுடவியல் ஆய்வாளர்கள் முதலானோர் நாட்டுப்புற விளையாட்டுக்களை இவை பிணைக்கப் பெற்றுள்ள பண்பாட்டுப் பின்புலத்தோடு பொருத்திப் பார்க்கும் அவர்களின் ஆய்வுப் பார்வைதான் நமக்கு இப்போது தேவைப்படுகின்றது. சமுதாய நிறுவனங்களாக நாட்டுப்புற விளையாட்டுக்கள் பொழுதுபோக்கு நிலையிலும் வீரம் பற்றிய நிலையிலும் உருவாக்கம் பெற்றது விலங்குகளோடு மனிதன் வாழ்ந்த காலத்திலாகும். பின் மனிதர்களுக்குள்ளேயே இத்தகு நாட்டுப்புற விளையாட்டுக்களின் பங்கும் அடிப்படையானதே.

பண்பாட்டு ஊடாட்டமும் உலகமயமாதலும் நாட்டுப்புற விளையாட்டுக்கள் மருவி வரக் காரணமாக அமைகின்றன. பண்பாட்டு ஊடாட்டம் எனும் போது அயல் பண்பாட்டு முறைமைகளின் மீதான கவர்ச்சியால் அயலக விளையாட்டுக்கள் சமூக அந்தஸ்து கருதி தமிழர் வீட்டுப் பிள்ளைகள் மீது வலிந்து பெற்றோர்களாலேயே ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனின் வலுவான நீட்சிதான் அழியும் விளிம்பில் இன்று நாட்டுப்புற விளையாட்டுக்கள் குன்றுவதற்கு அடிப்படை.







இருப்பினும் இவற்றுக்கு மீள உயிர்கொடுக்கும் பணிகள் ஆங்காங்கே ஆரம்பித்து வருவதைக் காண முடிகின்றது. பொங்கல் விழாவில் நாட்டுப்புற விளையாட்டுக்கள் ஓரளவிற்கேனும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் இது தொடர்கிறது. இந்தியா, சிங்கப்பூர், ஆபிரிக்கா எனப் பல நாடுகளில் தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளில் பாரம்பரிய விளையாட்டுக்கள் தான் சிறப்பிடம் வகிக்கின்றன. இவ்விளையாட்டுக்களை முதன்மைப்படுத்தும் பொங்கல் விழா கொண்டாடப்படும் தை மாதத்தை தமிழர் மரபுத்திங்களாகக் கனடா நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது' - என ஜெ. கார்த்திக் (கலாநிதிப்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம். 'நெற்கதிர்' இதழாசிரியர்) கூறுகின்றமை கவனிக்கத்தக்கது.

- இது போன்ற செய்திகளிலிருந்து நாம் புரிந்து கொள்வது, விளையாட்டில் உடல், உள்ளம் தொடர்பானது என்பதை தொடர்புபடுத்துவதோடு பண்பாட்டோடும் நாட்டுப்புற விளையாட்டுக்களை நிகழ்த்தினாலன்றி இவற்றை மீள்பயனாக்கம் அடையச் செய்வது என்பது மிகவும் கடினம் என்பதைத் தான்.






# உள்ளகப் பொறிமுறையினூடாக பிரச்சினைக்குத் தீர்வு பேச்சுக்கு புலம்பெயர் தமிழர்களுக்கு கோட்டா அழைப்பு





இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று, அதன் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. தலைமையகத்துக்குப் பிரவேசித்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்ற குட்டரெஸ், 1978ஆம் ஆண்டில், சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்குத் தான் விஜயம் செய்திருந்தமையையும் கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குச் சுற்றுலா சென்றமையையும், அதன்போதான அழகான நினைவுகளையும் ஞாபகப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளராக, இலங்கை தொடர்பில் தான் பணியாற்றியமை மற்றும் 2006 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தமை தொடர்பாகவும், குட்டரெஸ் நினைவுபடுத்தினார்.

சுமார் 30 ஆண்டுகள் நிலவிய யுத்தம் காரணமாக, மிகவும் சிக்கலான நிலைமைக்கு விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்து சமுத்திர வலயத்தில், மாபெரும் சமூக மற்றும் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றும் இலங்கையிடமிருந்து, தொடர்ந்தும் அப்பணியை எதிர்பார்க்கிறேன் என, பொதுச் செயலாளர் எடுத்துரைத்தார்.

ஐ.நா. பொதுச் செயலாளருடன் கலந்துரையாடக் கிடைத்தமையையிட்டு தான் மகிழ்ச்சியடைகிறேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடொன்று, கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தீர்க்கமான முறையில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப்பரவலை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும், பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இதுவரையில், இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நவம்பர் மாத இறுதிக்குள், 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என, தரவுகளுடன் எடுத்துரைத்தார்.

இதன்போது, தடுப்பூசி ஏற்றலில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, பொதுச் செயலாளர், தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவான தான், பொதுமக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை அவ்வாறே நிறைவேற்றுவதில், கொரோனாத் தொற்றுப் பரவலானது பெரும் தடையாக இருக்கின்றதெனத் தெரிவித்த ஜனாதிபதி, இருப்பினும், 30 வருட காலமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த தன் பின்னர் ஏற்பட்ட இடைநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009 ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பாரிய அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும், பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, தான் ஆட்சிக்கு வந்த தன் பின்னர் விடுவித்துள்ளேன் என எடுத்துரைத்த ஜனாதிபதி, அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் நீண்டகாலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும் போராட்டக்காரர்களுக்கென்றே, தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிவில் அமைப்புகளுடன் இணைந்து தான் செயற்படும் விதம் தொடர்பிலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுக்குத் தான் அழைப்பு விடுக்கிறார் எனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென மீண்டுமொருமுறை எடுத்துரைத்த ஜனாதிபதி, நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதைத் தன்னால் உறுதிபடத் தெரிவிக்க முடியுமென்ற போதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

## வட்ஸ் அப் ஊடாக பண மோசடி; இரு நைஜீரிய பிரஜைகள் கைது

இணையம் ஊடாக பண மோசடியில் ஈடுபட்ட நைஜீரிய பிரஜைகள் இருவர் தெஹிவளையில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சி.ஐ.டியின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் எனவும் 58 மற்றும் 30 வயதுகளை உடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தவை வருமாறு -

‘இந்த இரண்டு சந்தேகநபர்களும் இலங்கை பெண்ணொருவருக்கு, பரிசொன்று கிடைத்துள்ளதாகவும் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்டளவு பணத்தை வைப்புச்செய்ய வேண்டுமெனவும் கூறி வட்ஸ் அப் ஊடாக குறுந்தகவல் அனுப்பியுள்ளனர். குறித்த பரிசின் படத்தையும் அனுப்பியுள்ளனர். அத்துடன் இந்த விடயம் உண்மை என்பதை உணர்த்துவதற்காக பல்வேறு உபாயங்களைக் கையாண்டுள்ளனர். இந்நிலையிலேயே பொலிஸ் விசாரணையில் இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். - எனத் தெரிவித்தார்.

விசாரணைகளின்படி கைது செய்யப்பட்ட நைஜீரியர்களான சந்தேகநபர்கள் இருவரும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## ஆவாக்குழுவைச் சேர்ந்த நால்வர் யாழில் கைதாகினர்

ஆவா குழுவைச் சேர்ந்த நால்வர் போதைப்பொருளுடனும் வாளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த சந்தேக நபர்கள் பயணித்த காரையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

ஆவா குழுவின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் என பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள, நல்லூர் அரசடி பகுதியைச் சேர்ந்த முத்து என்பவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருகிறார் எனப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, முத்து என்பர் காரில் தனது நண்பர்களுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் எனும் தகவல் கிடைத்ததை அடுத்து, பொலிஸ் புலனாய்வு பிரிவினர் அவர்களின் காரை பின்தொடர்ந்து பரமேஸ்வர சந்திக்கு அருகில் வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது காருக்குள் இருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் வாள் ஒன்றையும் மீட்ட பொலிஸார், சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## திலீபனின் 34 ஆம் ஆண்டின் 5 ஆம் நாள் நினைவேந்தல்!

உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அகிம்சைப் போராளி தியாகதீபம் திலீபனின் 34ஆம் ஆண்டின் 5ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் குறித்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகா மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



காலைக்கதிர் Kalaikkathir

# நான் குற்றவாளி என்பதை ஒருபோதும் ஏற்றுகமாட்டேன்

## உறுதியாகக் கூறுகிறார் லொஹான் ரத்வத்த

கொழும்பு, செப். 21

அநுராதபுரம் சிறைக்குச் சென்றதும் உண்மை, தமிழ் அரசியல் கைதிகளுடன் உரையாடியதும் உண்மை. இதன்போது தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்த்தேனே தவிர அவர்களை ஒருபோதும் அச்சுறுத்தி சித்திரவதைக்கு உட்படுத்தவில்லை.

எனினும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் மூலமாக அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சதித் திட்டமொன்று அரங்கேறியுள்ளது என இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

தன்மீதான குற்றச்சாட்டை விசாரித்து ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எந்தத் தீர்மானமும் எடுக்க முடியும், ஆனால் நான் குற்றவாளி என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் எனவும் அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீதான பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவர் பக்க கருத்தை முன்வைக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் எனக்கு வழங்கப்பட்ட சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் 29 சிறைச்சாலைகளும், இரண்டு புனர்வாழ்வு மையங்களும் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

தீப்பிடிக்கும் நிலையில் மிகவும் மோசமான கட்டத்தில் நான் இவற்றைப் பொறுப்பேற்றேன் எனக் கூற முடியும். அவ்வாறான நிலையில் நான் பொறுப்பேற்ற பின்னர் நிலைமைகளை முழுமையாகச் சரிசெய்து சிறைக்கைதிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது மட்டுமல்லாமல் சிறை அதிகாரிகளின் கொள்ளை, குற்றச்செயல்களை முழுமையாகத் தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுத்தேன்.

ஒரு சில அதிகாரிகளை இடமாற்றினேன். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை நான் முன்னெடுத்த காரணத்தால் திட்டமிட்ட சதித்திட்டத்தை முன்னெடுத்து எனக்கு எதிராக சதித்திட்டம் நிகழ்த்தி என்னை பழிவாங்கியுள்ளனர் என்றே கூற வேண்டும்.

இவர்கள் கூறுகின்றமை போன்று எந்தவொரு குற்றமும் என்னால் இடம்பெறவில்லை. நான் சிறைக்குச் சென்றமை உண்மையே, அநுராதபுரம் சிறைச்சாலை மற்றும் வெலிக்கடை சிறைக்குச் சென்றேன், நான் எப்போதுமே சிறைகளைப் பார்வையிட செல்லும் வேளைகளில் முதலில் சிறை சமையலறைக்கே செல்வேன், சிறைக்கைதிகளுக்கு முறையாக உணவு வழங்கப்படுகின்றதா என்பதையே முதலில் கவனிப்பேன்.

அன்றும் அவ்வாறே நான் சென்றேன், அதிகாரிகளையும் நான் கண்காணித்தேன். அன்று நான் சென்று சில பகுதிகளை பார்வையிட்டேன். அதனை நான் மறுக்கவில்லை. ஆனால் அவற்றையும் தாண்டி என்னால் எந்தக் குற்றமும் நிகழவில்லை. அதேபோல் நான் ஒரு பெண்ணுடன் சிறைக்குச் சென்றேன் எனக் கூறுகின்றனர், ஆனால் நான் அவ்வாறு செல்லவில்லை, அவ்வாறு என்னுடன் வந்ததாகக் கூறும் பெண் யார் என்று கூட எனக்குத் தெரியாது.

இவ்வாறு நான் சென்றதற்கான ஆதாரங்கள் இருந்தால் முதலில் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். முடிந்தால் அவற்றை வெளிப்படுத்துமாறு நானும் கேட்டுக்கொள்கின்றேன்.அதேபோல் குடிபோதையில் சிறைக்கு சென்றேன் என கூறுகின்றமையும் பொய்யான குற்றச்சாட்டாகும், நான் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பதவியை ஏற்றுக்கொண்ட நாளில் இருந்து ஒரு தடவையேனும் குடித்துவிட்டு சிறைகளுக்குச் சென்றமை கிடையாது.

அதுமட்டுமல்ல சிறைக்குள் செல்லும் வேளையில் ஆயுதங்களைக் கொண்டுசெல்ல முடியாது, கையடக்கத் தொலைபேசியைக்கூட கொண்டுசெல்ல முடியாது. அவ்வாறு இருந்தும் மிகப்பெரிய பொய்களை கூறி ஏன் இவ்வாறு செய்கின்றனர் என எனக்கு விளங்கவில்லை. அதேபோல் அமைச்சுப் பதவியை துறக்க வேண்டும் என எனக்கு யாரும் வலியுறுத்தவில்லை.

ஊடகங்களில் எனக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் நலன் கருதி நானே சிந்தித்து அமைச்சுப் பதவியை துறக்க நடவடிக்கை எடுத்தேன். ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ என்னை பதவி விலகுமாறு வலியுறுத்தவில்லை. இந்த காலகட்டத்தில் ஒழுக்கமான சிறைக்கூடங்களை உருவாக்கி அரசாங்கத்திடம் கையளித்துவிட்டு நான் பதவி விலகினேன்.

நான் செய்த தவறுகளுக்காக அமைச்சுப் பதவியை துறந்தேன் எனக் கூறுகின்றமை பொய்யான விமர்சனமாகும். ஜெனிவா விவகாரங்கள் சென்றுகொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி அடுத்ததாக அமெரிக்கா செல்லவிருந்த நிலையிலும் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் நெருக்கடிக்குள் தள்ளக்கூடாது என்பதற்காக நானாகவே இந்தத் தீர்மானத்தை எடுத்தேன்.

இந்த சூழ்ச்சி தமிழ் புலம்பெயர் தரப்புகளால் அரசாங்கத்துக்கு விடுத்த தாக்குதலாகவே இதனை நான் கருதுகின்றேன். என்னை இலக்குவைத்து இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்தி அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சூழ்ச்சியே இதன் பின்னணியில் இடம்பெற்றுள்ளது. நான் முட்டாள் அல்லன், இந்த சூழ்ச்சிகள் எனக்கு நன்றாக விளங்கின. அதற்காகவே நானாக பதவி துறந்தேன்.

நான் குற்றவாளி என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதுமட்டுமல்ல அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை சித்திரவதை செய்தேன் என்பதும் அவர்களை முழந்தாலிட்டு துப்பாக்கியை கொண்டு அச்சுறுத்தினேன் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது. நான் அவர்களுடன் உரையாற்றியது உண்மையே, அவர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா என்பதை நான் ஆராய்ந்து பார்த்தேன்.

அதற்கு அப்பால் எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை, சிறைக்கைதிகள் மீது கை வைக்கக்கூட இல்லை. திட்டமிட்டு அரசாங்கத்தைப் பழிவாங்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இப்போது என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக விசாரிக்க எந்தவித தலையீடுகளும் அழுத்தம் கொடுக்காது அமைதியாக உள்ளேன். என் மீதான குற்றச்சாட்டை ஜனாதிபதியும் பிரதமரும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

அரசாங்கம் எடுக்கும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் கட்டுப்படுவேன். ஆனால் ஒருபோதும் நான் குற்றம் செய்தேன் என ஏற்றுகொள்ளவே மாட்டேன் எனவும் அவர் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# பட்டமளிப்பை நிகழ்நிலையில் நடத்த மாணவர்கள் எதிர்ப்பு




(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

நிகழ்நிலையில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்று பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழா பகுதி இரண்டாவது செப்டெம்பர் 16,17,18ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக ஒக்டோபர் 7,8 மற்றும் 9ஆம் திகதிகளில் நடத்துவதாகப் பிற்போடப்பட்டது.

அந்தத் திகதிகளில் மாணவர்களை நேரில் அழைத்து பட்டமளிப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சால் அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை ஒக்டோபர் 7ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுகின்றது. இதுதொடர்பாக நாம் கடந்த 15ஆம் திகதி துணைவேந்தருக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தோம். எனினும், துணைவேந்தரிடம் இருந்து சாதகமான பதில் எமக்குக் கிடைக்கவில்லை.

எனவே, நாடு முழுவதும் வழமைக்குத் திரும்பிய பின்னர் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கே மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தாமல் நேரடியாக மாணவர்களை அழைத்து வழமை போன்று நடத்த யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கோருகின்றோம் - என்றுள்ளது.

## அச்சுறுத்தல் சம்பவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது ருவிட்டர் பதிவினூடாக வெளிக்கொணர்ந்ததை அடுத்து பல்வேறு தரப்புக்களிலுமிருந்தும் அரசு மீதான அழுத்தத்தைத் தொடர்ந்து சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரக்வத்த தனது அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்திருந்தார்.

இந்நிலையில், குறித்த சம்பவத்தை அடுத்து தங்களுடைய உறவுகளின் பாதுகாப்பு குறித்து அச்சமைடைந்துள்ள அரசியல் கைதிகளின் உறவுகள் அவர்களைச் சென்று பார்வையிடுமாறு கேட்டுக்கொண்டதன் பிரகாரம் இரண்டாவது முறையாகவும் அவர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று சென்று பார்வையிட்டனர்.

இதற்கு முன்னதாகவும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், செயலாளர் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோர் கடந்த 16ஆம் திகதி சென்று தமிழ் அரசியல் கைதிகளுடன் பேசியிருந்தார்.

இந்நிலையில், நேற்றைய சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்,

குறித்த அச்சுறுத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகள் மிகவும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவத்தில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சர் பதவி விலகுவது மட்டுமல்லாமல் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் அரசியல் கைதிகளுடைய வழக்குகள் இழுபறிகளின்றி விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு விசாரணைக்காலம் வரை அவர்கள் தமது சொந்த பிரதேசங்களுக்கு அருகாமையிலுள்ள சிறைச்சாலைக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கள்ளத் தொடர்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற ஒரு பிள்ளையின் தந்தையே கடந்த சனிக்கிழமை இரவு படுகொலை செய்யப்பட்டார்.

அவர் தேங்காய் துருவல் கட்டளையால் கடுமையாகத் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவரின் மனைவியான 28 வயதுடைய பெண் மற்றும் அவருடன் தொடர்பை வைத்திருந்த 28 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, கொல்லப்பட்டவரின் மனைவியுடன் கள்ளத் தொடர்புடையவரும் கொலையுடன் தொடர்புள்ளமை ஆரம்ப விசாரணையில் கண்டறியப்பட்டது.

அதனை முதலாவது சந்தேகநபரான கொல்லப்பட்டவரின் மனைவியும் தனது வாக்குமூலத்தில் ஏற்றுக்கொண்டிருந்தார். எனினும், பின்னர் தனக்கும் இரண்டாவது சந்தேகநபருக்கும் தொடர்புள்ளமை உண்மை, ஆனால் கொலையைத் தான் மட்டுமே செய்தார் எனத் தெரிவித்தார்.

பின்னர் இரண்டாவது சந்தேகநபர் காலினால் தனது கணவனின் கழுத்தைப் பிடித்து வைத்திருந்தபோது தான் தேங்காய் துருவல் கட்டையால் தாக்கியதாக ஒத்துக்கொண்டார்.

இதேவேளை, இரண்டாவது சந்தேகநபருக்கு 40 இற்கு மேற்பட்ட கொள்ளை, திருட்டு மற்றும் வன்புணர்வு வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

## மேலும் 93 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் ஆண் ஒருவர் 30 வயதுக்குட்பட்டவர். 12 ஆண்கள், 12 பெண்கள் என 24 பேர் 30-59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 68 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 32 ஆண்களும், 36 பெண்களும் அடங்குகின்றனர்.

# இருவர் மீது வாள்வெட்டு; சந்தேகநபர் ஒருவர் கைது

## வட்டுக்கோட்டையில் வன்முறைக் குழு அட்டகாசம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.,வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார் கோயில் பகுதியில், ஞாயிறு இரவு வன்முறைக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாவடி பகுதியைச் சேர்ந்த வன்முறைக்கும்பல் ஒன்று, ஞாயிறு இரவு 7 மணியளவில் முதலியார் கோயில் பகுதிக்குள் உள்நுழைந்து அங்கு தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். அத்துடன் வேலிகளின் தகரங்கள் அடித்து பிடுங்கப்பட்டு வீடு ஒன்றின் கதவையும் குறித்த வன்முறைக் கும்பல் அடித்து உடைத்துள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் குறித்த பகுதிக்கு வந்து பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை செய்துவிட்டு சென்றனர்.

அதன் பின்னர் மீண்டும் அப்பகுதிக்கு வந்து வன்முறைக் கும்பல் இன்னொரு முதியவர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன் சைக்கிள் கடை, தையல் கடை போன்றவற்றின் மீதும் தாக்குதல் செய்துவிட்டு தப்பித்துச் சென்றது.

அதன் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த பகுதிக்குச் சென்று தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் 7 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வன்முறைக்குழு இதற்கு முன்னரும் இவ்வாறு தாக்குதல் நடாத்தியுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# வவுனியாவில் 5 பேர் உயிரிழப்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 42 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 5 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவி னர் தெரிவித்துள்ளனர். வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவு கள் சில நேற்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 42 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியாவில் நேற்று 5 பேர் மரணமடைந்துள்ளனர். 4ஆம் கட்டைப் பகுதியில் பெண் ஒருவரும் (வயது-86), ரயில் நிலைய வீதியில் ஆண் ஒருவரும் (வயது- 63), புதுக்குளம் பகுதியில் பெண் ஒருவரும் (வயது-61), கோயில் புதுக்குளம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-81), தாண்டிகுளம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-73) என 5 பேர் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

# கணவனைக் குத்திக்கொலைசெய்த மனைவி ஊரடங்கு காலத்தில் தொடரும் கொடூரங்கள்

கண்டி மாவட்டம், பொல்காஹவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெட்டிகும்புர பிரதேசத்தில் குடும்பத்தகராறு காரணமாக தனது கணவரை மனைவி கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில், மெட்டிகும்புர, கெந்தே ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய உயிரிழந்த நபரின் மனைவியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் பொல்காஹவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 6 ஆயிரமாக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1,055 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து 4 இலட்சத்து 33 ஆயிரத்து 93 பேர் குணமடைந்துள்ளனர்.

# குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

மாத்தறை மாவட்டம், அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்துவ பிரதேசத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அக்குரஸ்ஸ, மலிதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் அக்குரஸ்ஸ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.